உயிர்ப் பூ இரண்டு மலர்ந்து விதையாய் விழுந்நது
இரு கரும்புலிகளின் தியாகம் உயர்ந்தது
நகுலனுடன் கண்ணாளன் நாடமைக்க வெடித்தான்
நடுக்கடலில் கடற்கலன் கனலாய் எரிந்தது

எதிரி படை கலங்கள் இங்கே எனியும் வராது
இதற்கு முன்பும் இரு டோறா கடலில் போச்சுது 2
இங்குள்ள எதிரிப்படை என்ன செய்யும்
யார் வருவார் என்றிருந்து அழிந்து போகும் 2

ஆழ் கடலும் ஏழ்கடலும் எங்கள் கையில் உடல்
வான் வெளியும் தரை வெளியும் எங்கள் கையிலே 2
சிங்களத்து எச்சி இனி இங்கே இராது புலி
சிங்களத்து பாயும் இனி மிச்சம் விடாது 2

எம் இனத்தின் விடுதலைதான் வித்துக்களே இனி
உம் நினைவுகள் நனவாகும் நாழும் வருகுதே 2
எம் இனத்தின் விடுதலைதான் தலைவன் எண்ணம் இனி
எல்லோருக்கும் எம் தலைவன் காவல் தெய்வம் 2